# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஓகஸ்ட்/செப்டம்பர் 2013)

## EDUS 2202 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும் (Child Growth and Study)

02 OCT 2013
EASTERN UNIVERSITY

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) ஆர்னல்ட் கெசல் (1825) கூறிய பிள்ளைப்பருவத்தின் மூன்று பிரதான வட்டங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) சிக்மன்ட்புரோட் குறிப்பிடும் பிள்ளைவிருத்தியின் ஐந்து முக்கிய உள-பாலியல் கட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) "முதிர்ச்சியும் கற்றலும் ஒன்றிணைந்த உடற்றொழிற்பாடாகும்." இக்கூற்றினை ஒரு வயதுக்குட்பட்ட குழந்தையை மையமாக வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

02.(அ) முதிர் மூலவுயிரியில் பிறப்புரிமையின் காரணமாக ஏற்படும் அசாதாரணமான குறைபாடுகள் கருக்கொள்ளல் காலத்தில் முதிர் மூலவுருவைப் பாதிக்கின்றன. இக்குறைபாட்டில் "இடவுணின் குறைபாடு (Down's Syndrome) முக்கியமானதாகும். இதைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "காப்பிணித்தாயின் குழப்பமடைந்த மனவெழுச்சிகள் முதிர்மூலவுருவை கூடுதலாக பாதிக்கின்றன." இச்செயற்பாடு பற்றி சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) "சமுக வகுப்பினரிடையே காணப்படும் பிரச்சினைகளின் விகித அளவில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் முதிர்மூலவுருவில் எதிர்மாறான பாதிப்பை ஏற்படுத்துகின்றன." இக்கூற்றினை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

03.(அ) குழந்தைகளில் எண்ணக்கரு எவ்வாறு வளர்ச்சியடைகின்றது என்பதைப் பற்றி ஜீன் பியாஜே கூறிய கருத்தினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) ஜீன்பியாஜே கூறிய நான்கு அறிவு வளர்ச்சிக் கட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) தன்மயமாதல் (Assimilation), தன்னமைவாதல் (Accommodation) ஆகிய எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

04. முன் குழந்தைப்பருவத்தில் ஆரம்ப அறிவு வளர்ச்சி தொடர்பாக எடுத்துரைக்கப்படும் பின்வரும் எண்ணக்கருக்களைச் சுருக்கமாக ஆராய்க.

(அ) புலக்காட்சி முன்னுரிமை (07 புள்ளிகள்)

(ஆ) பொருளின் நிலைப்பு (08 புள்ளிகள்)

(இ) புலன் இயக்க நுண்ணறிவு (10 புள்ளிகள்)

05. (அ) பிள்ளை வளர்ப்பில்

(i) ஏற்றுக்கொள்ளல் - மறுத்தல்

(ii) சுதந்திரம் - கட்டுப்பாடு

என்பவற்றைப் பெற்றோருடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியில் சமூக விளையாட்டுக்களின் பங்களிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும்." இக்கூற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

06. (அ) மனவெழுச்சி பற்றி புலோமின் (1985) கூறிய உடல்மாற்றம் (அகரீதியான துலங்கல்), உளவியல் மாற்றம் (அறிவு சார்ந்த எதிர்த்தாக்கம்) பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கம் தருக.

(15 புள்ளிகள்)

(ஆ) "பிள்ளைகளின் எதிர்மறையான மனவெழுச்சிகளை மாற்றப் பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியரும் எவ்வாறு பங்களிக்கலாம்? ஆராய்க.

(10 புள்ளிகள்)